4. நடைமுறைக் கேள்விகள்.

(அ) அனைத்திந்திய வானொலி பற்றி மாநில சட்டப் பேரவையில் கருத்து தெரிவித்தல்.

THIRU K VINAYAKAM : I rise on a point of order Sir, I am interested in the Constitutional problem and I have no other object in raising this point of order. How is this relevant when this House is incompetent to deal with matters relating to the All India Radio which comes under the purview of theCentral Government ? However much I may agree with the Chief Minister or the Member who has called attention—that is a different thing—I am interested in maintaining healthy precedents. How are we competent to discuss this subject here ? The Speaker must have thought about it. I know the Speaker is a very intelligent person knowing the rules pretty well. How are we competent to discuss this subject which is beyond our scope and as our discussion on it will be *ultra vires* of the Constitution ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. விநாயகம் அவர்கள் இது மத்திய அரசைப் பொறுத்தது, மாநில அரசுக்கு உரிமை இல்லை என்று கூறினார்கள். மத்திய அரசு சம்பந்தமான பொருள்கள் பற்றி மாநில அரசு நேரடியான நடவடிக்கைகள் எடுக்க முடியாது என்றாலும் மத்திய அரசுக்கு இந்த மாநில அரசு தனது கருத்துக்களைக் கூறுவதற்கு உரிமை இருக்கிறது. ஆகவே, இது எந்த விதத்திலும் முரண்பட்டதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : After the resultant confusion on account of the decision of the Central Government and even the breakdown of law and order, is this House not competent to discuss the subject ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு விநாயகம் அவர்கள் மாநில அரசுக்கு எந்த விதமான அதிகாரமும் இருக்கவில்லை, இது மத்திய அரசைப் பொறுத்த விஷயம் என்று சொன்னார்கள். ஆனால் ப்ரோக்ராம் அட்வைசரிக் கமிட்டி என்ற குழுவை ஏற்படுத்தி மாநில அரசு இந்த நிகழ்ச்சி நிரலை உருவாக்கவும் அதில் நடைபெறுவதை மேற்பார்வை செய்வதற்குமான அதிகாரங்களை மத்திய அரசு மாநில அரசுக்குத் தந்திருக்கிறது. வானொலி பரப்பிடும் எந்தச் செய்தி யானாலும் அல்லது நிகழ்ச்சியானாலும் அவற்றைக் கண்காணிக்கவும், வரையறுக்கவும், முடிவுகட்டவும் மாநில அரசுக்குத் தகுதி இருக்கிறது. ஆகவே, இதில் மாநில அரசுக்கு ஈடுபாடு கிடையாது என்று சொல்ல முடியாது.

3. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி.

வானொலி செய்தி ஒலிபரப்பில் இந்திக்கு முதலிடம் அளித்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நிலை—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : தலைவரவர்களே, எவ்வித அவசியமும், அவசரமும் இல்லாததொரு நிலையில் 1968-ஆம் ஆண்டு டிசம்பர் 8-ம் நாள் முதல் காலை 8-மணிக்கு அனைத்திந்திய வானொலியில் ஒலி பரப்பப்படும் ஆங்கிலச் செய்திக்குப் பதிலாக இந்திச் செய்தி ஒலி பரப்பப்பட்டு வருகிறது. இதனைப்பற்றிய செய்திகளைப் பார்த்தவுடனேயே 1968 டிசம்பர் 10-ம் நாளன்று இந்திய அரசுக்கு, மாநில அரசு, மக்களின் உள்ளத்